ஆனால், பஞ்சாயத்தைப் பிரிப்பதற்கான திட்டம் அரசினருக்கு இன்னும் வந்து சேரவில்லை. மாவட்ட அளவில் இவ்விஷயம் பரிசிலனையில் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்பே இரண்டு கிராமங்களை யும் தனிப் பஞ்சாயத்தாக பிரிக்கவேண்டும் என்று தீர்மானம் செய்து சர்க்கார் அளவுக்கு பேப்பர் வந்துவிட்டது. தேர்தல் நடந்து முடிந்து விடட்டும், பிறகு ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் வேறு கருத்தைச் சொன்னார்களே, பொன்னம்பூண்டியிலிருந்து இன்னும் மெம்பர்களே தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கோரக்கேணி பஞ்சாயத்தில் ஜூன் 1966-ல் தான் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. தீர்மானம் கலெக்டருக்குப் போயிருக்கிறது. சர்க்காருக்கு வந்தாலும் பொதுத் தேர்தலுக்கு முன் மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

Srirangam Municipality

* 179 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to merge Srirangam Municipality with Tiruchirappalli Municipality?

• **கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இதைப்போல் யோசனை எதுவும் இல்லை.

திரு. வை. சங்கரன் : சார், ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டிக்குச் செலவு ரூ. 5 லட்சத்துக்கு மேல் ஆகிறது, அதற்கு வேண்டிய வருவாய் இல்லை என்று அறிகிறேன். திருச்சி மாநகர் திட்டம் தயாரிக்கும்போது இதையும் சேர்த்துத் தயாரித்தால் அனுகூலமாக இருக்கும் என்று அம்மாதிரிச் செய்வார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வருமானம் ரூ. 7,43,000 அளவுக்கு இருக்கிறது. 42,000 ஜனத்தொகை இருக்கிறது. தன்னுடைய நிர்வாகத்தைச் சீராக அமைத்துக்கொள்ளும் அளவில் நிர்வாகம் நன்றாக இருக்கிறது என்று இன்ஸ்பெக்டர்கள் அவ்வப்போது தகவல் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பிரச்னைக்கு இடமில்லை.

திரு. ந. சுப்பிரமணியம் செட்டியார் : சபாநாயகர் அவர்களே, முனிசிபாலிட்டியால் எந்தவித வசதியும் செய்துகொள்ள முடிய வில்லை. அங்கு ஒரு பெரிய கோவில் இருக்கிறது, தேவஸ்தானம் இருக்கிறது. வருஷம் பூராவும் திருவிழா இருக்கிறது. சுகாதாரத் திற்காகச் செலவு செய்யக்கூட முடியவில்லை. கார்ப்பரேஷன் ஆக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தப் பிரச்னையைப்பற்றி கனம் முதல் அமைச்சர் முனிசிபல் பில்டிங் திறக்க வந்தபோது

சொன்னேன். கைலாச நகர் போன்றவற்றையெல்லாம் சேர்த்து கார்ப்பரேஷனுகச் செய்வார்களா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்போது இருக்கும் முறையில் சிறு யூனிட்டாக இருந்தால்தான் மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்பதை அங்கத்தினர் ஏற்றுக்கொள்ளுவார்கள் என நினைக்கிறேன். அவர்கள் சொல்லுவதுபோல் எவ்விதப் பிரச்னையும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அவ்வித அபிப்பிராயம் சர்க்காரிடம் இல்லை.

தேர்தல்களில் பணி புரிந்தவர்களுக்குப் பயணப்படி

* 180 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :**
திரு. செ. மாதவன் : } கனம் தல

நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டில் நமது ராஜ்யத்தில் நடைபெற்ற பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களில் பணியாற்றிய சிப்பந்திகள், ஆசிரியர்கள், உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அவர்களுக்குரிய போக்குவரத்துப் பயணப்படி கொடுக்கப்பட்டு விட்டதா ?

(இ) இல்லையெனில் காரணமென்ன ?

(உ) பாக்கியிருந்தால் மார்ச் மாத முடிவிற்குள்ளாக பூரணமாகக் கொடுத்து முடித்துவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) கன்னியாகுமரி, நீலகிரி, இராமநாதபுரம், வட ஆர்காடு, கோயம்புத்தூர் (பொள்ளாச்சி கோட்டம் தவிர), செங்கற்பட்டு (பொன்னேரி வட்டம் தவிர) மாவட்டங்களில் 1965-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் நடைபெற்ற பஞ்சாயத்துப் பொதுத் தேர்தலில் வாக்கெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட அனைவருக்கும் சேரவேண்டிய பிரயாணப்படித் தொகையை நிர்ணயித்துக் கொடுக்கப்பட்டது.

இதர மாவட்டங்களிலிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) விரைவாகப் பிரயாணப்படித் தொகையை நிர்ணயித்து வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அரசினர் தக்க ஆணை பிறப்பித்துள்ளனர்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், நான் சுட்டிக் காட்டிய மார்ச் மாதம் கடந்த மார்ச் மாதம். தேர்தல் நடந்து ஒரு வருஷம் ஆகியும், சாதாரண பயணப்படியை முடிவு செய்து கொடுக்க இவ்வளவு காலதாமதம் ஏற்படுவது நியாயம்தானு ? ஒன்றிரண்டு மாதங்கள் என்று ஒரு காலவரையறையைக் குறிப்பிட்டு முடிவு செய்து கொடுக்க அவசர நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?